


பலவைகையான பைகளை வெச்சிருக்கறதையும், மூட்-க்கு ஏத்த மாதிரி பயன்படுத்தறதையும்-எஞ்சாய்- பண்றவங்களுக்கு, சிம்பிள் ஹேண்ட் பேக்-ஐ, எப்படி செய்யறதுன்னு, இன்னைக்கு, நாங்க, சொல்லிக் கொடுக்கப்போறோம்.



தனக்கு இஷ்டமான ப்ரிண்ட்ஸ்- இருக்கிற பைகளை, சொந்தமா வெச்சுக்க விரும்பறவங்க, இந்த பாடங்களை ஃபாலோ- பண்றதுக்கு இது தான் சரியான நேரம்.இதனோட கடைசியிலே, நீங்க,சொந்தமா தொழில் செய்யற விருப்பம் உள்ளவங்களா இருந்தா, உங்களுக்காக மட்டுமில்ல,உங்களை மாதிரியே டிசைன்கள்-லே விருப்பம் இருக்கறவங்களுக்கும், நீங்க பைகளை செய்து விற்கலாம்.

உங்க பாடத்துக்காக, நாங்க இந்த கலர்ஃபுல்-ஆன, பெய்ஸ்லி ப்ரிண்டட் ஃபேப்ரிக் -ஐ எடுத்திருக்கோம்.



ஒரு, பெர்ஃபெக்ட் ஹேண்ட் பேக்- செய்யறதுக்கு, உங்களுக்குத்தேவையானது- 18-க்கு,30- அங்குல அளவிலே, பிரிண்ட் பண்ணப்பட்ட துணி, 26 அங்குல நீளம் இருக்கிற பேக் ஸ்ட்ராப்ஸ்- ரெண்டு, மேட்சிங் த்ரெட், மெஷரிங் ஸ்கேல், மார்க்கர், பின்கள் அப்புறம் கத்தரிக்கோல்.



முதல்லே,துணியை இப்படி, ரைட் சைட்- ஒண்ணை ஒண்ணு பார்க்கற மாதிரி பாதியா மடிச்சுக்கங்க. ஓரங்களை ஒண்ணா வையுங்க. ஓரத்திலே இருந்து கொஞ்ச தூரத்திலே ரெண்டு ஓப்பன் சைட்ஸ்-ஐயும், இப்போ காட்டின மாதிரி பின்- பண்ணிக்கங்க.

ஒவ்வொரு பக்கத்துக்கும் மூணு பின்- போதும். மேல் பக்கம் ஓப்பன்-ஆவே இருக்கட்டும். துணியை தூயிங் மெஷினுக்கு, கொண்டுவாங்க.











ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டர்-ஐ A -லேயும் ஸ்டிச் லென்த் செலெக்டர் -ஐ,2-க்கும், 3-க்கும் இடையிலேயும், செட்- பண்ணுங்க. தைக்க ஆரம்பியுங்க. ரிவெர்ஸ் ஸ்டிச் லீவர்-ஐ பயன்படுத்தி, ஸ்டிசஸ் -ஐ, லாக்- பண்ண மறந்துடாதீங்க. ஓரங்களை, கடைசி வரைக்கும் தையுங்க.கடைசியை, லாக்- பண்ண மறந்துடாதீங்க. நூலை கட் பண்ணுங்க. எதிர் பக்கத்தை தைக்கறதுக்கும் அதே மாதிரி செய்யுங்க. ரெண்டு பக்கத்தையும் தைச்ச பிறகு, பின்-களை எடுக்க மறந்துடாதீங்க.

ஒரு மூலையை இந்த மாதிரி முக்கோணமா ஷேப்- பண்ணி, பின் பண்ணுங்க. இன்னொரு பக்கத்திலேயும் அதே மாதிரி செய்யுங்க. முக்கோணத்தினுடைய கூரான முனையிலே இருந்து, 2½ -அங்குலத்துக்கு அளந்து, மார்க் பண்ணுங்க. மார்க் பண்ண பாயிண்ட்-லே, நான் செய்யற மாதிரி, ஹரிஸான்டல்-ஆ, ஒரு, கோடு போடுங்க.

அடுத்த பக்கத்திலேயும் இதே மாதிரி செய்யுங்க.

ரெண்டு முனைகள்-லேயும், மார்க் பண்ண lines-லே தையுங்க. ரிவெர்ஸ் ஸ்டிச் லீவர் -ஐ பயன்படுத்தி, எண்ட்ஸ்-ஐ, லாக்- பண்ணுங்க.

நூலை வெட்டிடுங்க. ரெண்டு பக்கத்திலேயும்,தையல் போட்ட இடத்தை விட்டு கொஞ்சம் தள்ளி,கொஞ்சம் மார்ஜின்- விட்டு, மூலைகளை, கட் பண்ணிடுங்க.இது, நீட் ஷேப்-ஐ கொடுக்கும், தேவையில்லாத துணியும் இருக்காது.

அடுத்தது, ஓப்பன் சைட்-லே, ஓரத்தை,ஒரு அங்குலத்துக்கு மடிச்சுக்கங்க.அதை பின் பண்ணிக்கங்க. பேக் ஸ்டார்ப்-ஐ, அட்டாச்- பண்றதுக்காக, ரெண்டு முனையிலே இருந்தும்,5-அங்குலம் அளந்து மார்க் பண்ணிக்கங்க.அடுத்த பக்கத்திலேயும், அதே மாதிரி பண்ணுங்க.நான் செய்யறதை அப்படியே, ஃபாலோ- பண்ணிகிட்டு வாங்க. வீடியோ-வை, பாஸ்- பண்ணி, ஸ்டெப் -ஐ, கம்ப்ளீட்- பண்ணி, அப்புறம் கன்டினியூ- பண்ணலாம்.

பேக் ஸ்டார்ப் னுடைய ஒரு முனையை, வீடியோ-லே, பார்க்கற மாதிரி, மார்க்கிங்-க்கு, மேலே, - ஸ்டார்ப் க்கு, சென்டர்-லே, இருக்கிற மாதிரி அலைன் - பண்ணுங்க. அதை பின் பண்ணுங்க. ஸ்டார்ப் -, ஸ்ட்ரெயிட் -ஆ, இருக்கற மாதிரி பார்த்துக்கங்க. ஸ்டார்ப் - னுடைய இன்னொரு முனையை,அதே பக்கத்திலே இருக்கிற இன்னொரு மார்க்கிங்-க்கு,அலைன்- ஆகற மாதிரி வையுங்க,அதை பின் பண்ணிடுங்க.

பையினுடைய இன்னொரு பக்கத்திலே, ரெண்டாவது strap-ஐயும், இதே மாதிரி செய்யுங்க. பையை, மெஷினுக்கு கொண்டு வாங்க.




சிக் சாக் ஸ்டிச் -க்காக, ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டர்
-ஐ C-க்கு திருப்புங்க. ஸ்டிச் லென்த் -ஐ 1.5-லே, செட்- பண்ணுங்க.

பையினுடைய ரெண்டு ஓரங்களையும், படத்திலே காட்டற மாதிரி ஒவ்வொண்ணா, தையுங்க.



இப்போ, ஸ்ட்ரெயிட் ஸ்டிச்
க்காக ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டர்
-ஐ, A - க்கு திருப்புங்க, ஸ்டிச் லென்த் -ஐ, 2.5-லே, செட்- பண்ணுங்க

பேக் ஸ்ட்ராப்-ஓட , நீங்க பின் - செய்த, பையினுடைய, மடிக்கப்பட்ட ஓரத்தை தைக்க ஆரம்பியுங்க.தைக்கும் போது பின்- களை எடுக்க மறந்துடாதீங்க. ஸ்ட்ராப் ஸ்ட்ராங்-ஆ, இருக்கறதுக்கும், ஃபினிஷிங் நீட்-ஆ, இருக்கறதுக்கும், மடிப்பு இருக்கிற இடத்திலே, தையல் விளிம்பு ஆரம்பிக்கிற இடத்திலே இருந்து தையுங்க. வீடியோ-லே நீங்க இதை பார்க்கலாம்.



இப்போ பையை, ரைட் சைட்- வெளியிலே இருக்கிற மாதிரி திருப்புங்க.உங்க பை தயார்.நல்லா இருக்கு, இல்லையா ?ரொம்ப ஈஸி-ஆவும், இருக்கு.

இன்னும் கொஞ்சம் பைகள் செய்யுங்க.ஒருத்தருக்கு நிறைய ஹேண்ட் பேக்ஸ்- தேவைப்படாது. #MadebyMe டேக்-போட்டு, வெளியிலே எடுத்துகிட்டு போங்க.உங்க ப்ரெண்ட்ஸ்- சீக்கிரமா ரெக்வெஸ்ட்-ஓட, க்யூ-லே இருப்பாங்க.இந்த பைகள் நல்ல கிஃப்ட்-ஆவும் இருக்கும். பிளாஸ்டிக் பேக்ஸ்- பண்றதை, இது, தடுக்குது-ங்கறதையும், நாம மறந்துடக்கூடாது.

அதனாலே, இப்போ, உங்க ஸ்டேட்மெண்ட் பேக்-ஐ நீங்க செய்ய ஆரம்பியுங்க.